SINCE 2013

We Shine Academy®

guiding you to get through

TNPSC | TNUSRB | TET | SSC | BANK EXAM

# DAILY CURRENT AFFAIRS APRIL 20

| CONTENT | EXAM REMAINER | KINDLY JOINS |
|---|---|---|
| 1. National News<br>2. TN State News<br>3. PYQ CA Questions<br>4. PRACTICAL MCQ'S<br>5. REVISION | Group I- 06.09.2026<br>மீதம் 138 நாட்கள்<br><br>Group II & IIA- 25.10.2026<br>மீதம் 187 நாட்கள்<br><br>Group IV- 20.12.2026<br>மீதம் 244 நாட்கள் | https://t.me/weshinetnpscexams<br><br>https://chat.whatsapp.com/LBUXIXSof5046E3GWmFuTs?mode=gi_t |

Visit youtube link: https://youtube.com/live/WB150FZ3MiU



# 1. TODAY NEWS ARTICLES

# இலங்கை அதிபருடன் சி.பி.ராதாகிருஷ்ணன் சந்திப்பு

## இந்திய வீட்டு வசதித் திட்டம், மீனவர் பிரச்னை குறித்து ஆலோசனை

கொழும்பு, ஏப். 19: இலங்கை அதிபர் அநுர குமார திசாநாயகவை இந்திய குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் ஞாயிற்றுக்கிழமை சந்தித்தார். அப்போது இலங்கையில் இந்தியா சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் வீட்டு வசதித் திட்டம் குறித்தும், மீனவர் பிரச்னை உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்தும் ஆலோசித்தார்.

இரு நாள்கள் அரசுமுறைப் பயணமாக 49 பேர் குழுவுடன் இலங்கை வந்த சி.பி.ராதாகிருஷ்ணனை கொழும்பில் உள்ள பண்டாரநாயக விமான நிலையத்தில் விளையாட்டுத் துறை அமைச்சர் சுனில் குமார கமகே மற்றும் மூத்த அதிகாரிகள் வரவேற்றனர்.

இதுவே இலங்கைக்கு இந்திய குடியரசு துணைத் தலைவர் ஒருவர் மேற்கொள்ளும் முதல் சுற்றுப்பயணம் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுகுறித்து அவர்கள் மேலும்



இலங்கை தலைநகர் கொழும்பில் அதிபர் அநுர குமார திசாநாயகவை ஞாயிற்றுக்கிழமை சந்தித்த இந்திய குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன்.

கூறுகையில், 'இலங்கை அதிபர் அநுர குமார திசாநாயகவை தலைநகர் கொழும்பில் உள்ள அவரது அலுவலகத்தில் சி.பி.ராதாகிருஷ்ணன் ஞாயிற்றுக்கிழமை சந்தித்தார். அப்போது பல்வேறு துறைகளில் இலங்கை-இந்தியா இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்து இருவரும் ஆலோசித்தனர்.

இலங்கையில் இந்தியா சார்பில் மேற்கொள்ளப்பட்டுவரும் வீட்டு வசதித் திட்டம், அண்மையில் டித்வா புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நிவாரணமாக இந்தியா வழங்கிய ரூ.4,000 கோடியில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து இருவரும் விவாதித்தனர். குறிப்பாக, இந்திய வம்சாவளியைச் சேர்ந்த தமிழ் சமூகத்தினர் வசிக்கும் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் மறுகட்டமைப்புத் திட்டங்கள் மற்றும் மீனவர் பிரச்னைகள் குறித்தும் இருவரும் கலந்துரையாடினர்.

**பிரதமர், எதிர்க்கட்சித் தலைவருடன் சந்திப்பு:** அதன்பிறகு இலங்கை பிரதமர் ஹரிணி அமரசூர்யாவை கொழும்பில் உள்ள அவரது இல்லத்தில் சி.பி.ராதாகிருஷ்ணன் சந்தித்தார். இரு நாடுகளிடையே கலாசார, பாரம்பரிய உறவின் முக்கியத்துவத்தைப் பகிர்ந்த அவர்கள், இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது குறித்து ஆலோசித்தனர்.


அதைத் தொடர்ந்து, இலங்கை நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசாவை சி.பி.ராதாகிருஷ்ணன் சந்தித்து கலந்துரையாடினார்' என்றனர்.

**முக்கியஒப்பந்தங்கள்கையொப்பமாகும்:** சி.பி.ராதாகிருஷ்ணனின் இலங்கைப் பயணத்தின் ஒரு பகுதியாக பல்வேறு துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்தும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமாக வாய்ப்புள்ளதாக இலங்கை வெளியுறவு அமைச்சகம் தெரிவித்தது.




- Kachchativu is a barren island that lies between India and Sri Lanka
- There are no permanent inhabitants or any permanent structures on the island other than a Roman Catholic Church, administered by the Bishop of Jaffna.

**In 1974 Sri Lankan Prime Minister Sirimavo Bandaranaike and Indian Prime Minister Indira Gandhi signed the Maritime Agreements, which ceded the island of Kachchativu to Sri Lanka.**



# ஒடிசாவில் இந்தியாவின் முதல் அதிநவீன 3டி கண்ணாடி சிப் பேக்கேஜிங் ஆலை

புவனேசுவரம், ஏப்.19: ஒடிசா தலைநகர் புவனேசுவரத்தில் இந்தியாவின் முதல் அதிநவீன முப்பரிமாண (3டி) கண்ணாடி சிப் பேக்கேஜிங் ஆலையின் கட்டுமானப் பணிக்கு மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ், மாநில முதல்வர் மோகன் சரண் மாஜீ ஆகியோர் ஞாயிற்றுக்கிழமை அடிக்கல் நாட்டினர்.

இதுதொடர்பாக மோகன் சரண் மாஜீ 'எக்ஸ்' தளத்தில் வெளியிட்ட பதிவில், 'ஒடிசாவில் தொழில்துறை வேகமாக பரிணாம வளர்ச்சி அடைந்து வருகிறது.

இந்தியாவின் முதல் அதிநவீன 3டி கண்ணாடி சிப் பேக்கேஜிங் ஆலைக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இது மைல்கல் தருணமாகும். இந்தத் தொலைநோக்குப் பார்வை கொண்ட திட்டம் பெரிய அளவில் வேலைவாய்ப்புகளை உருவாக்கி, அதிநவீன மின்னணு உற்பத்தியில் ஒடிசாவை பெரும் சக்தியாக நிலைநிறுத்தும்.



ஒடிசா மாநிலம் புவனேசுவரத்தில் அமையவுள்ள முப்பரிமாண கண்ணாடி சிப் பேக்கேஜிங் ஆலையின் மாதிரி வடிவைப் பார்வையிட்ட மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ், முதல்வர் மோகன் சரண் மாஜீ உள்ளிட்டோர்.

இது வெறும் தொழில் முதலீடு மட்டுமல்ல. வருங்கால தொழில்நுட்பங்கள் எங்கு உருவாக்கப்படும் என்பதற்கான பிரகடனம் என்று தெரிவித்தார்.

செமிகண்டக்டர் உற்பத்தி பணியில் சிப் பேக்கேஜிங் கடைசி கட்டமாகும். இந்நிலையில் சிப் பேக்கேஜிங் ஆலை குறித்து அதிகாரி ஒருவர் கூறுகையில், 'ஒடிசாவில் சிப் பேக்கேஜிங் ஆலை கட்டுமானம் மூலம், உலகின் மிக அதிநவீன சிப் பேக்கேஜிங் தொழில்நுட்பம் இந்தியாவுக்கு வரவுள்ளது. இந்த ஆலையை சுமார் ரூ.1,943 கோடி செலவில் கட்டமைக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்தது. இந்த ஆலை மூலம் நேரடியாகவும், மறைமுகமாகவும் சுமார் 2,500 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

இந்த ஆலையில் தயாரிக்கப்படும் சிப்கள் விண்வெளித் துறை, பாதுகாப்பு, செயற்கை நுண்ணறிவு, 5ஜி தொழில்நுட்பங்கள், தரவு மையங்கள் உள்ளிட்ட முக்கிய துறைகளுக்குப் பயன்படும்' என்று தெரிவித்தார்.

# 2027–இல் ஜி20 செயற்கைக்கோள் ஏவப்படும்

ஹைதராபாத், ஏப். 19: 'பருவநிலை, காற்று மாசு மற்றும் தட்பவெப்ப நிலையைக் கண்காணிப்பதற்கான 'ஜி20' செயற்கைக்கோள் வரும் 2027–இல் விண்ணில் ஏவப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது' என்று இஸ்ரோ தலைவர் வி. நாராயணன் தெரிவித்தார்.

தெலங்கானா மாநிலம், ஹைதராபாதில் உள்ள இந்திய அரசுப் பொறியாளர்கள் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு அமைப்பு (டிஆர்டிஓ), இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ), இந்திய ஏரோனாடிகல் சொசைட்டி உள்ளிட்ட அமைப்புகளின் விஞ்ஞானிகள் மத்தியில் வி. நாராயணன் பேசியதாவது:

ஒரே ஏவுகலனில் (ராக்கெட்) எந்தவித மோதலுக்கும் உள்ளாகாமல் 100–க்கும் அதிகமான (104 செயற்கைக்கோள்கள்) செயற்கைக் கோள்களை விண்ணில் நிலைநி

## இஸ்ரோ தலைவர்

றுத்திய முதல் நாடு என்ற பெருமையை இந்தியா பெற்றுள்ளது.

தற்போது, ஜி–20 நாடுகளின் பயன்பாட்டுக்காக (ஐரோப்பிய ஒன்றியம், ஆப்பிரிக்க ஒன்றியம், இந்தியா, அமெரிக்கா, ரஷியா, சீனா உள்பட 21 நாடுகளை உள்ளடக்கிய அமைப்பு) 'ஜி20' செயற்கைக்கோளை விண்ணில் ஏவுவதற்கான பணியை இஸ்ரோ மேற்கொண்டு வருகிறது. இத்திட்டத்தில் இந்தியா முன்னணி பங்கை வகிக்கிறது. பருவநிலை, காற்று மாசு மற்றும் தட்ப வெப்ப நிலையைக் கண்காணிப்பதற்கான இந்த



செயற்கைக்கோள் வரும் 2027–இல் விண்ணில் ஏவப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது என்றார்.

மேலும், 'ஏராளமான வர்த்தக ரீதியிலான செயற்கைக்கோள் திட்டங்களையும் இஸ்ரோ செயல்படுத்தி வருகிறது. 34 நாடுகளின் 433 செயற்கைக்கோள் உள்பட வணிக ரீதியில் விண்ணில் செயற்கைக்கோள்களை ஏவும் நடவடிக்கைகளை இஸ்ரோ மேற்கொண்டுள்ளது. வணிக ரீதியில் மிக அதிக எடை கொண்ட செயற்கைக்கோளையும் இஸ்ரோ விண்ணில் வெற்றிகரமாக ஏவியுள்ளது.

வரும் 2040–இல் விண்வெளி வீரர்களை நிலவுக்கு அனுப்புவதற்கான பணியில் இஸ்ரோ தீவிரமாகப் பணியாற்றி வருகிறது. இத்திட்டத்தை இந்தியா வெற்றிகரமாகச் செயல்படுத்தினால், விண்கலம் ஏவுதல் தொழில்நுட்பம், செயற்கைக்கோள் தொழில்நுட்பம், செயற்கைக்கோள் பயன்பாட்டு திட்டங்கள், மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் திட்டங்களில் முன்னிலை வகிக்கும் நாடுகளில் ஒன்றாக இந்தியாவும் சேர்ந்துவிடும்.

மேலும், 'சமுத்ரயான்' என்ற ஆழ்கடல் ஆராய்ச்சித் திட்டத்துக்காக ஆழ்கடலின் உயர் அழுத்தத்தைத் தாங்கும் வகையிலான 100 மி.மீ. பருமனுடன் 2.2 மீட்டர் சுற்றளவுடன் கூடிய டைட்டேனியம் கலனை உருவாக்கும் பணியில் இஸ்ரோ ஈடுபட்டு வருகிறது' என்றார் அவர்.

The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344
www.weshineacademy.com

## 2. National News




# மகளிர் இடஒதுக்கீடு-தொகுதி மறுசீரமைப்பு மசோதா தோல்வி

**மூன்றில் இரு பங்கு பெரும்பான்மை கிடைக்கவில்லை**

புது தில்லி, ஏப். 17: மக்களவை - பேரவைகளில் 33 சதவீத மகளிர் இடஒதுக்கீட்டை விரைந்து அமலாக்குவதுடன், மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கையை அதிகபட்சம் 850 வரை அதிகரிக்க வகை செய்யும் அரசமைப்புச் சட்டத் திருத்த மசோதா, மக்களவையில் வெள்ளிக்கிழமை தோல்வியடைந்தது.

ஓர் அரசமைப்புச் சட்டத் திருத்த மசோதா நிறைவேற மொத்த உறுப்பினர்களின் (543) எண்ணிக்கையில் 50 சதவீதத்துக்கு மேற்பட்ட வாக்குகளும், வாக்கெடுப்பில் பங்கேற்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரு பங்கு பெரும்பான்மைக்கான வாக்குகளும் தேவை.

மேற்கண்ட மசோதா மீதான வாக்கெடுப்பில் மூன்றில் இரு பங்கு பெரும்பான்மைக்கான வாக்குகள் கிடைக்கவில்லை. வாக்கெடுப்பில் 528 உறுப்பினர்கள் பங்கேற்ற நிலையில், மசோதாவுக்கு ஆதரவாக 298 வாக்குகளும், எதிராக 230 வாக்குகளும் கிடைத்தன; மூன்றில் இரு பங்கு பெரும்பான்மைக்கு 352 வாக்குகள் தேவை என்ற நிலையில், 54 வாக்குகள் வித்தியாசத்தில் மசோதா தோல்வியடைந்தது.

நாடு முழுவதும் கடந்த சில நாள்களாக இந்த மசோதா விவகாரமே பேசுபொருளாக இருந்தது. குறிப்பாக, தென் மாநிலங்களின் பிரதிநிதித்துவம் குறையக் கூடும் என்ற கவலைகளும், மகளிர் இடஒதுக்கீட்டின் பின்னணியில் தொகுதி மறுசீரமைப்பை முன்னெடுப்பதாக மத்திய அரசு மீது விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டன.

அதேநேரம், தொகுதி மறுசீரமைப்பு செயல்முறையில் எந்த மாநிலத்துக்கும் பாகுபாடு காட்டப்படாது; எந்த மாநிலமும் இழப்பைச் சந்திக்காது என்று பிரதமர் மோடி மற்றும் மத்திய அமைச்சர்கள் விளக்கமளித்தனர். எனினும், மசோதா தோற்கடிக்கப்பட்டுவிட்டதால், எதிர்க்கட்சிகளுக்கு எதிராக இந்த விவகாரத்தை ஆளும் தேசிய ஜனநாயக கூட்டணி கையிலெடுத்துள்ளது.

**மத்திய அரசின் திடீர் முடிவு:** மக்களவை, பேரவைகளில் மகளிருக்கு 33 சதவீத இடஒதுக்கீடு வழங்கும் சட்டம் கடந்த 2023-இல் நிறைவேற்றப்பட்டது. இந்தச் சட்டத்தின்படி, 2027 மக்கள்தொகை கணக்கெடுப்பு அடிப்படையிலான தொகுதி மறு

**மூன்றில் இரு பங்கு பெரும்பான்மைக்கு தேவை 352 வாக்குகள்**




**பாஜக கூட்டணி எம்.பி.க்கள் போராட்டம்**

மகளிர் இடஒதுக்கீடு-தொகுதி மறுசீரமைப்பு மசோதா தோற்கடிக்கப்பட்டதால், எதிர்க்கட்சிகளைக் கண்டித்து, நாடாளுமன்ற வளாகத்தில் பாஜக கூட்டணி எம்.பி.க்கள் உடனடியாக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு கூறுகையில், 'மகளிரை கௌரவிக்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க வாய்ப்பை எதிர்க்கட்சிகள் தவறவிட்டுவிட்டன. பெண்களின் உரிமைகளுக்காக பிரதமர் மோடி அரசு தொடர்ந்து போராடும்' என்றார்.

புக்கு இடையே அறிமுகப்படுத்தப்பட்டு, விரிவான விவாதம் தொடங்கியது.

**அனல் பறந்த விவாதம்:** மசோதாவுக்கு ஆதரவாக பிரதமர் மோடி, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, மத்திய சட்ட அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் உள்ளிட்டோரும், எதிராக மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, மூத்த உறுப்பினர் கே.சி.வேணுகோபால், பொதுச் செயலர் பிரியங்கா காந்தி

# பெரிய பொருளாதார நாடுகளில் 6-ஆவது இடத்துக்கு சென்ற இந்தியா: ஐஎம்எஃப்

புது தில்லி, ஏப். 17: சர்வதேச நிதியம் (ஐஎம்எஃப்) வெளியிட்ட பெரிய பொருளாதார நாடுகளின் தரவரிசையில் 5-ஆவது இடத்திலிருந்து 6-ஆவது இடத்துக்கு இந்தியா சென்றுள்ளது. பிரிட்டன் 6-ஆவது இடத்திலிருந்து 5-ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது.

அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு குறைந்தது மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (ஜிடிபி) அடிப்படை ஆண்டை 2011-12-இலிருந்து 2022-23-ஆக மாற்றியமைத்தால் இந்தியா ஓரிடம் பின்தங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஜப்பானை பின்னுக்குத் தள்ளி 4-ஆவது இடத்துக்கு முன்னேற முடியும் என மத்திய அரசு எதிர்பார்த்தது.

ஐஎம்எஃப் தரவின், கடந்த 2024-இல் இந்தியாவின் ஜிடிபி 3.76 டிரில்லியன் அமெரிக்க டாலராக இருந்தது. பிரிட்டனின் ஜிடிபி 3.7 டிரில்லியன் அமெரிக்க டாலராக இருந்தது. கடந்த ஆண்டில் இந்தியாவின் ஜிடிபி மதிப்பு 3.92 டிரில்லியன் அமெரிக்க டாலராக இருந்த நிலையில், பிரிட்டனின் ஜிடிபி 4 டிரில்லியன் அமெரிக்க டாலராக உயர்ந்தது.

இந்தியா வேகமாக வளர்ந்து வரும் பெரிய பொருளாதார நாடாக இருந்த போதிலும், கடந்த சில மாதங்களாக அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு சரிவைக் கண்டது.

அமெரிக்க டாலருக்கு நிகரான இந்தியாவின் ரூபாய் மதிப்பு கடந்த 2024-இல் 84.57-இலிருந்து 2025-இல் 88.48-ஆக வீழ்ச்சியடைந்தது. நிகழாண்டில் மேலும் வீழ்ச்சியடைந்து 92.59 செல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது. அமெரிக்க டாலருக்கு எதிராக பிரிட்டனின் பவுண்ட் மதிப்பு வலுவடைந்து வருகிறது.

ஐஎம்எஃப் தரவின் அடிப்படையில், நிகழாண்டில் பணமாற்ற விகிதத்தின் அடிப்படையில் பெரிய பொருளாதார நாடுகளில் இந்தியா 6-ஆவது இடத்தில் தொடரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், அடுத்த ஆண்டில் பிரிட்டனை மட்டுமல்லாமல் ஜப்பானையும் கடந்து 4-ஆவது இடத்துக்கு இந்தியா முன்னேறும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதேநிலை தொடரும் நிலையில், 2031-இல் இந்தியா ஜெர்மனியை பின்னுக்குத் தள்ளி 3-ஆவது இடத்துக்குச் செல்லும்.

# ரூ. 12,980 கோடி நிதி தொகுப்புடன் 'பாரத கடல்சார் காப்பீட்டுக் குழுமம்'

**மத்திய அமைச்சரவை ஒப்புதல்**

புது தில்லி, ஏப். 18: தொடர் கடல்சார் காப்பீடு பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் ரூ. 12,980 கோடி நிதி தொகுப்புடன் கூடிய 'பாரத கடல்சார் காப்பீட்டுக் குழுமம்' என்ற உள்நாட்டு காப்பீட்டுக் குழுமத்தை உருவாக்குவதற்கான பரிந்துரைக்கு மத்திய அரசு சனிக்கிழமை ஒப்புதல் அளித்தது.

பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் தில்லியில் சனிக்கிழமை நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான ஒப்புதல் அளிக்கப்பட்டது.

மேற்காசிய போர் காரணமாக இந்திய சரக்கு கப்பல்கள் மற்றும் இந்தியா நோக்கி வந்த சரக்கு கப்பல்களின் போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டு, ஏற்றுமதியாளர்கள் கடும் பாதிப்பைச் சந்தித்தனர். பாதிப்பிலிருந்து அவர்கள் மீளும் வகையில் சிறப்பு காப்பீட்டுத் திட்டங்களை மத்திய அரசு அறிவித்தது. அதன் தொடர்ச்சியாக, தற்போது, உள்நாட்டு காப்பீட்டுக் குழுமத்தை உருவாக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் கூறியதாவது:

இந்திய கொடி பொருத்திய அல்லது இந்தியாவின் கட்டுப்பாட்டில் உள்ள கப்பல்கள் மற்றும் இந்தியாவிலிருந்து புறப்படும் அல்லது இந்தியா நோக்கி வரும் சரக்கு கப்பல்களுக்கு ஓர் இறையாண்மை உத்தரவாதத்தை அளிக்கும் விதமாக 'பாரத கடல்சார் காப்பீட்டுக் குழுமம்' என்ற உள்நாட்டு காப்பீட்டுக் குழுமத்தை உருவாக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.


இந்த நிதி தொகுப்பு, நிலையற்ற கடல் வழிப் பாதைகளைக் கடக்கும் சர்வதேச நாடுகளிலிருந்து இந்திய துறைமுகங்களுக்கு சரக்குகளை ஏற்றி வரும் கப்பல்கள் மற்றும் இந்திய துறைமுகங்களிலிருந்து சர்வதேச நாடுகளுக்கு சரக்குகளை ஏற்றிச் செல்லும் கப்பல்களுக்கு மலிவு விலை காப்பீடு தொடர்ந்து கிடைப்பதை உறுதி செய்யும்.


குறிப்பாக, கப்பலின் உடல் பகுதி, இயந்திரங்கள் பழுது, சரக்குகள் பாதிப்பு மற்றும் போர் அபாயங்கள் உள்ளிட்ட அனைத்து கடல்சார் அபாயங்களையும் உள்ளடக்கியதாக இந்தத் தொகுப்பு இருக்கும் என்று குறிப்பிட்டார்.


**உ.பி., ஆந்திரத்தில் ரூ. 24,815 கோடியில் ரயில் வழித்தட திட்டம்:** உத்தர பிரதேசம், ஆந்திர மாநிலங்களில் ரூ. 24,815 கோடி மதிப்பில் இரண்டு பல் வழி ரயில் பாதைத் திட்டங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.


இந்தத் திட்டத்தின் கீழ், உத்தர பிரதேசத்தில் காஜியாபாத்திலிருந்து சித்தாபூர் வரை 403 கி.மீ. தொலைவுக்கு 3-ஆவது மற்றும் 4-ஆவது ரயில் பாதைகள் அமைக்கப்பட உள்ளது. ஆந்திர மாநிலத்தில் ராஜமுந்திரி முதல் விசாகப்பட்டினம் வரையிலான 198 கி.மீ. தொலைவுக்கு 3-ஆவது மற்றும் 4-ஆவது ரயில் வழித் தடங்கள் அமைக்கப்பட உள்ளன. இது, இந்த இரு மாநிலங்கள் மார்க்கமான ரயில் போக்குவரத்தை குறிப்பிடத்தக்க அளவில் மேம்படுத்தும் என்று மத்திய அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


புதிய மாநிலங்கள் உருவான ஆண்டு
வரவிருக்கும் தேர்வுகளுக்கு முக்கியமானது
ஆந்திரப் பிரதேசம் → 1 அக்டோபர் 1953
மகாராஷ்டிரா → 1 மே 1960
குஜராத் → 1 மே 1960
நாகாலாந்து → 1 டிசம்பர் 1963
ஹரியானா → 1 நவம்பர் 1966
ஹிமாச்சல பிரதேசம் → 15 ஜனவரி 1971
மேகாலயா / மணிப்பூர் / திரிபுரா → 21 ஜனவரி 1972
சிக்கிம் → 26 ஏப்ரல் 1975
மிசோரம் / அருணாச்சல பிரதேசம் → 20 பிப்ரவரி 1987
கோவா(26வது) → 30 மே 1987
சத்தீஸ்கர்(27வது) → 1 நவம்பர் 2000
உத்தரகாண்ட்(27வது) → 9 நவம்பர் 2000
ஜார்க்கண்ட்(28வது) → 15 நவம்பர் 2000
தெலுங்கானா (29வது) → 2 ஜூன் 2014
Bhuvi


Pichavaram mangrove
Pichavaram mangrove is located between two prominent estuaries, the Vellar and the Coleroon. The Vellar-Coleroon estuarine complex forms the Killai backwater and Pichavaram mangroves. The Pichavaram forest offers waterscape, backwater cruises and another very rare sight - the mangrove forest trees that are permanently rooted in a few feet of water.


HIGHEST CROP PRODUCERS IN INDIA (2025-26)
Key Agricultural Statistics for UPSC Prep
VAAGAI IAS
CROP
HIGHEST PRODUCER
KEY HIGHLIGHTS
SUGARCANE
UTTAR PRADESH
India's Largest Producer (40-45% of National Output)
Record Sugar Recovery Rate (2025-26)
Main Region: Indo-Gangetic Plain (Alluvial Soil)
COTTON
GUJARAT
Top Producer in India (25-30% contribution)
Major cultivation in Black Cotton Soil (Regur)
Crucial to "Cotton Basket" with Maharashtra & Telangana
GROUNDNUT
GUJARAT
"Groundnut Capital of India" (Over 40% of Production)
Dominant Region: Saurashtra (Junagadh, Rajkot)
Suited for Sandy/Loamy Soil
Source: Ministry of Agriculture & Farmers Welfare (Estimates)




## 3.PYQ CA Questions

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது உண்மை?

(i) உயர்நிலைப் பள்ளிகளில் மாணவர் வருகையை அதிகரித்துள்ளது

(ii) தொடக்கப்பள்ளி குழந்தைகள் இத்திட்டத்தில் பயனடைகிறார்கள்

(iii) இந்தத் திட்டம் குழந்தைகளிடையே கற்றல் திறன்களை மேம்படுத்தியுள்ளது

(iv) இத்திட்டம் அரசு பள்ளிகளில் மட்டும் செயல்படுத்தப்படுகிறது

(A) (i) மற்றும் (ii) மட்டும்

(B) (ii) மற்றும் (iii) மட்டும்

(C) (i) மற்றும் (iv) மட்டும்

(D) (ii) மற்றும் (iv) மட்டும்

Which of the following statements are true about "The Chief Minister's Breakfast Scheme"?

(i) It has increased student attendance to high schools

(ii) Primary school children benefit from the scheme

(iii) The scheme has led to improvement in learning skills among children


(iv) The scheme is limited to government schools only

(A) (i) and (ii) only

(B) (ii) and (iii) only

(C) (i) and (iv) only

(D) (ii) and (iv) only






## 4. Revision

China became India's largest trading partner in FY 2025–26, surpassing the United States, with total trade at USD 151.1 billion and a record trade deficit of USD 112.6 billion.

2025-26 நிதியாண்டில், அமெரிக்காவை விஞ்சி, சீனா இந்தியாவின் மிகப்பெரிய வர்த்தகப் பங்காளியாக உருவெடுத்தது. மொத்த வர்த்தகம் 151.1 பில்லியன் அமெரிக்க டாலராகவும், சாதனை அளவிலான வர்த்தப் பற்றாக்குறை 112.6 பில்லியன் அமெரிக்க டாலராகவும் இருந்தது.





Prime Minister has inaugurated the Delhi–Dehradun Economic Corridor, a major expressway project with an investment of around ₹12,000 crore aimed at boosting trade, logistics, industry, and employment.

வர்த்தகம், சரக்குப் போக்குவரத்து, தொழில் மற்றும் வேலைவாய்ப்பை மேம்படுத்தும் நோக்கில், சுமார் ₹12,000 கோடி முதலீட்டில் அமையவிருக்கும் டெல்லி-டேராடூன் பொருளாதார வழித்தடம் என்ற மிகப்பெரிய விரைவுச்சாலைத் திட்டத்தை பிரதமர் திறந்து வைத்துள்ளார்.



- The Centre has extended the tenure of the commission led by K. G. Balakrishnan till **June 10, 2026** (third extension).
- The commission was set up in **2022** to study **SC status for Dalits who converted to other religions**.
- It was formed by the Ministry of Social Justice and Empowerment.
- The issue is linked to **Constitution (Scheduled Castes) Order, 1950 under Article 341**.
    - At present, **SC status is given only to Hindus, Sikhs, and Buddhists**.




- India plans to achieve **cocoa self-sufficiency by 2040** under Aatmanirbhar Bharat.
- Aim is to reduce heavy cocoa imports (over **$866 million annually**).
- A **National Mission on Cocoa (2026–28)** will be launched to boost production.
- About **250 hectares of polyclonal seed gardens** will be developed initially.
- Focus on **farmer training** and expanding cocoa cultivation to **1 lakh hectares**.



| |
|---|
| • Nari Shakti Vandan Adhiniyam, 2023 came into force on **April 16, 2026** after official notification.<br>• It is a **constitutional amendment**, but needed notification to become operational.<br>• **Women's reservation is not applicable to the current Parliament/Assembly**.<br>• Implementation depends on **delimitation after the next Census (2027)**.<br>• The reservation is expected to be **fully implemented around 2034**.<br><br> |
| • Sports Genomics Programme launched by Gujarat ahead of the **2030 Commonwealth Games**.<br>• Aim is to create a **Gujarat Athlete Genome Database**.<br>• The database will combine **genetic, physiological, and performance data** to enhance athlete development.<br><br> |